# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

H.M.O.P.NO.122/2016 16.08.2019 PW1

Name: ரங்கசாமி த/பெ: அழகேசன்

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் கருத்துவேறுபாடு காரணம் காட்டி விவாகரத்து கோரியுள்ளேன். வேறு ஏதேனும் காரணம் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு மன உளைச்சல். எதிர்மனுதாரர் எனது மனைவி தான். ஜஸ்வின் எனது குழந்தைதான். என்ன விதமான மன உளைச்சல் ஏற்பட்டது என்றால் மொபைலிலிருந்து குறுஞ்செய்தி அனுப்பியிருந்த காரணத்தாலும், என்மீது வீண் சந்தேகம் கொண்ட காரணத்தாலும் மன உளைச்சல் ஏற்பட்டது. நான் வேறு பெண்ணுடன் தொடர்பு இருந்ததால் என்மீது சந்தேகம் பட்டார் என்றால் அதுபோல் இல்லை. என் உடன் பிறந்த தங்கையுடன் நான் தொடர்பில் இருப்பதாக சந்தேகப்பட்டார். திருமணம் நடந்த 2 மாதத்திலேயே அது போல் சந்தேகம் ஏற்படுத்தினார். அதன்பின்னிட்டுதான் நான் கோயம்முத்தூரில் சென்று என் மனைவியுடன் வாழ்ந்தேன் என்றால் சரிதான். ஆனால் பிரச்சனையுடன் சென்றேன். நான் வேண்டுமென்றே என் மனைவி என்மீது சந்தேகம் கொண்டதாக பொய்யுரைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரான என் மனைவி என்னையும், என் சகோதரியையும் தொடர்புபடுத்தி பேசி சந்தேகம் கொண்டார் என்ற சங்கதியை எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எந்த பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி மனுவினை படித்துப் பார்த்துவிட்டு பத்தி 15 ல் சொல்லியிருப்பதாக கூறினார். நான் சொல்லும் சங்கதி பொய் என்றும் மேற்படி பத்தி 15 ல் அதுபோல் விவரங்கள் இல்லை என்று சொன்னால் SMS யை படித்துப் பார்த்தால்தான் தெரியும். எதிர்மனுதாரர் என்னை என் சகோதரியுடன் தொடர்புபடுத்தி சங்கதி ஏதும் என் மனுவில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒப்பம்/ PW1

/ஒப்பம்/திரு.எம்.பாலமுருகன், பி.ஏ., பி.எல்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.